**நிர்மாண உத்தரவாத நிதியத்தின் - 2013**

---

நிர்மாண உத்தரவாத நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 2005 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 3/136 ஆம் இலக்க உறுதியின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் நிர்மாண உத்தரவாத நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் நிதியத்திடம் காணப்பட்ட ரூபா 3.96 பில்லியன் ஆன நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக விரிவான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் காசாக்கப்பட்ட பிணைப் பொறுப்பாக நிர்மாண சேவை நாடுனர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,150,000 தொகையை உரிய ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கு முறையான நடைமுறையொன்றை எடுக்கும் வரையில் கடன்பட்டோர் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் ரூபா 607,069,133 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயம் | பூகோள ரீதியாக பிரயாணம் செய்த தூரத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் ரூபா 1,073,000 தொகையான பிரயாணச் செலவினம் சம்பளத்துடன் சேர்க்கப்பட்ட கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கை | கணனிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 யூலை 14 ஆம் திகதிய பீஈடி 38 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பெறுமதி சேர் வரிக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாதிருந்ததுடன், உழைக்கும் போது செலுத்தும் வரிக்கு உட்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து வரி அறவிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 148,186,101 மிகையாக இருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 79,682,692 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 68,503,409 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், பிணைப் பொறுப்பு வருமானம் மற்றும் நிலையான வைப்பு வருமானம் அதிகரித்தமை அதற்காக பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 158,550 பெறுமதியான மடி கணனியொன்று உத்தியோகத்தர் ஒருவருக்கு விநியோகிப்பதற்குப் பதிலாக நிர்மாண உத்தரவாத நிதியத்தின் பெயரில் வழங்கப்பட்டிருந்தது. இதனால் இதற்கான பொறுப்பு, பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நம்பிக்கைப் பொறுப்பு அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிர்மாணப் உத்தரவாத நிதியத்தின் இறுதி தீர்ப்பாளர் திறைசேரி செயலாளராக இருந்த போதும் திறைசேரியின் அங்கீகாரமின்றி ஐந்து உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,000 இற்கும் ரூபா 10,000 இற்கும் இடைப்பட்ட வெவ்வேறுபட்ட விலைகளை அடிப்படையாகக் கொண்டு மேலதிக கொடுப்பனவுகளும் மேலும் மூன்று உத்தியோகத்தர்களுக்கு சேமிக்கப்பட்ட விடுப்புகளுக்காக ரூபா 226,300 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் போன்றவற்றிற்கான தீர்மானங்கள் நிதியத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் மற்றும் இலங்கை தேசிய நிர்மாண சங்கம் என்பவற்றின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த "மஹாஹிமானி 2013" தேசிய வெகுமதி வழங்கல் விழாவிற்காக மீளாய்வாண்டினுள் நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து ரூபா 2,500,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், அத்தொகையை

பிரசித்தப்படுத்தல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், நிதியத்திலிருந்து அவ்வாறான செலவினமொன்றை மேற்கொண்டதன் தேவைப்பாடு உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) நிதியத்தால் வழங்கப்படக்கூடிய பிணைப்பொறுப்பின் பெறுமதியின் உச்ச எல்லை குறித்த காலப்பகுதியில் நிதியத்தின் உரித்தில் பத்து மடங்கென 2012 பெப்ரவரி 08 ஆம் திகதிய நம்பிக்கைப் பொறுப்பு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அந்த ஆகக்கூடிய பொறுப்பு தொடர்பாக நிதியத்தின் தீர்ப்பாளரான திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் தற்போது காணப்படும் பிணைப்பொறுப்பு எல்லை சட்டரீதியானது என கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூலை 08 ஆம் திகதிய பீஈடி-பீயூ ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்க அனைத்து பொது முயற்சிகளாலும் தனது நிறுவன ஒழுங்கமைப்பு மீளமைக்கப்பட வேண்டியிருந்ததுடன், ஆட்சேர்ப்பு / பதவி உயர்வு நடைமுறை, பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் சம்பள அளவு என்பன திருத்தப்பட்டு தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவினது பரிந்துரையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசின் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பொன்று திறைசேரி செயலாளரின் அங்கீகாரமின்றி ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்களினது சம்பளம் 11 சதவீத முதல் 17 சதவீதம் வரையில் அதிகரிக்கப்பட்டிருந்தது.

### 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

நிர்ணயித்த பிரகாரம் உத்தரவாத பிணைப்பொறுப்பு அடிப்படையில் அறவிடப்படுகின்ற வரித்தொகை பெறப்படாததன் காரணமாக ரூபா 73,871 வரி வருமானம் நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் நடவடிக்கைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2002 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) கணக்கு வைத்தல்
(ஆ) வரி அறவீடு
(இ) வங்கிக் கணக்குகள்
(ஈ) பொருட் பதிவேடு
(உ) சில்லறைக் காசு